

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (9.5.2023) சென்னை, அண்ணாநகர் மேற்கு, 100 அடி பிரதான சாலையில், ரூ.15 கோடி மதிப்பீட்டில் நகரும் மின்படிக்கட்டுகளுடன் நடைமேம்பாலம் அமைக்கப்படுவது தொடர்பாக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சு.அமிர்தஜோதி, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் ஷேக் அப்துல் ரஹ்மான், மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் கூ.பீ. ஜெயின் , சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், மாநகராட்சி, சென்னை மெட்ரோ ரயில் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில்

# நாமக்கல் இந்திரா நகரில் பகுதிநேர நியாய விலைக் கடை!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி துவக்கி வைத்தார்!

நாமக்கல், மே 10 -

நாமக்கல் ஒன்றியம் இந்திரா நகர் பகுதியில் 200 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் பொன்விழா நகர் பகுதியில் செயல்பட்டு வரும் நியாய விலை கடையில் பொருட்களை வாங்கி வந்தனர். இந்திரா நகர் பகுதியில் 200 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இருப்பதால் இப்பகுதியில் தனியாக நியாய விலை கடை அமைக்க வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் கல்கி மகளிர் சுய உதவி குழு மூலம் பகுதி நேர நியாய விலைக் கடை நடத்துவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனுமதி அளிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இந்திரா நகர் பகுதியில் கல்கி மகளிர் குழு மூலம் நடத்தப்படும் பகுதி நேர நியாய விலை கடை திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாவட்ட வழங்கல் அலுவலர் ரமேஷ், மகளிர் திட்ட அலுவலர் பிரியா, நாமக்கல் ஒன்றிய கழக செயலாளர் வி.கே. பழனிவேல் ஆகியோர் முன்னிலை வகித்த னர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு நியாய விலை கடையைத் திறந்து வைத்து முதல் விற்பனையைத் துவக்கி வைத்து பேசினார். அப்போது, நாமக்கல் மாவட்டத்தில் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் நடத்தப்படும் 2 வது கடையாக கடை செயல்பட உள்ளது. இந்த கடையில் 185 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட உள்ளது. பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்கள் கடந்த 2 ஆண்டுகளாக, குறிப்பாக தி.மு.க. தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதவியேற்ற பின் தரமான பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மக்களின் மனதை அறிந்து அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்து கொடுக்கும் அரசாக திகழ்ந்து வருகிறது என்றார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர் மன்றத் தலைவர் து.கலாநிதி, வட்ட வழங்கல் அலுவலர் சின்ன த் தம்பி, கூட்டுறவு சார்பதிவாளர் சுரேஷ், நாமக்கல் ஒன்றிய குழு உறுப்பினர் செந்தில்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பொன்.சித்தார்த், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்பரர் வ.இளம்பரிதி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கிருபாகரன், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் மகேஷ், நகர இளைஞரணி சதீஷ், வினோத் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் பார்த்தசாரதி, முத்தையான், அகிலாண்டேஸ்வரி மௌலானா, புஷ்பராஜ், செந்தில், அன்பு, சக்திவேல், பிரஷாந்த், ஆனந்த குமார், செந்தில் குமார், கண்ணன், மகளிர் அணி அகிலா மற்றும் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை நாமக்கல் ஒன்றிய திமுக பொருளாளர் ச.கணேசன் செய்திருந்தார்.




